

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை அவரது இல்லத்தில் முன்னாள் அமைச்சரும் கழகத் துணைப் பொதுச் செயலாளருமான முனைவர் க.பொன்முடி அவர்கள் தமது பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (18.8.2026) சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



சென்னை கிழக்கு மாவட்டம் வில்லிவாக்கம் கிழக்கு பகுதியில் போராளி ஓய்வதில்லை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8–ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி பகுதிச் செயலாளர் வே.வாசு தலைமையில், மாவட்ட கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ., முன்னிலையில் நடைபெற்ற புகழரங்கத்தில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் திருச்சி என். சிவா எம்.பி., இயக்குனர் எழுத்தாளர் வி.சி. குகநாதன், திராவிட கழக துணை பொதுச் செயலாளர் வழக்கறிஞர் சே மெ. மதிவதனி, ஆகியோர் உரையாற்றினர். இக்கூட்டத்தின் இறுதியில் சமூக வலைத்தளத்தில் இந்த நாட்டில் நடக்கும் கொடுமைகளை அநீதிகளை எதிர்த்து பதிவிடுகின்ற பெண்களை ஆபாசமாக சித்தரிக்கின்ற த.வெ.க அரசை கண்டித்து சென்னை கிழக்கு மாவட்ட ஜென்சிகள் மற்றும் கழக நிர்வாகிகள் சமூக வலைத்தளத்தில் ஈடுபடும் பெண்களை ஆபாசமாக சித்தரிக்கின்ற த.வெ.க.அரசைக் கண்டிக்கிறோம் என்று முழக்கமிட்டு கண்டனம் ஆர்ப்பாட்டம் நடத்தினர். மேலும் கூட்டத்தில் மேயர் பிரியா ராஜன், அ.வெற்றி அழகன், தமிழன் பிரசன்னா, கார்த்திக் மோகன், கூ.பீ.ஜெயின், ஓ.ஏ.நாகலிங்கம், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### பல்வேறு நாடுகளில் உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு வழங்க வேண்டிய

# உதவித் தொகையை வழங்காமல் அவர்களின் எதிர்காலத்தை கேள்விக் குறியாக்கும் த.வெ.க. அரசு!

## கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி டிவிட்டர் பதிவு!

சென்னை, ஆக.19–

பல்வேறு நாடுகளில் உயர் கல்வி பயிலும் மாணவர்களுக்கு வழங்க வேண்டிய உதவித் தொகையை வழங்காமல் அவர்களின் எதிர்காலத்தை கேள்விக் குறியாக்கும் த.வெ.க. அரசு என்றும் இத் திட்டம் தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்டது என்பதற்காக இதையும் திட்டமிட்டு மறைமுகமாக செயலிழக்கச் செய்து நிறுத்துவதுதான் இந்த அரசின் நோக்கமா என்றும் தமது டிவிட்டர் பதிவில் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுகுறித்து கனிமொழி கருணாநிதி அவர்களின் டிவிட்டர் பதிவு வருமாறு:-

அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வி உதவித்தொகைத் திட்டத்தின் கீழ், மலேசிய தேசியப் பல்கலைக் கழகம் உள்ளிட்ட பல்வேறு நாடுகளிலுள்ள உயர்கல்வி நிலையங்களில் பயிலும் நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய உதவித்தொகையை வழங்காமல், அவர்களின்



எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கியுள்ளது த.வெ.க. அரசு.

தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்ட திட்டம் என்பதற்காக, இதையும் திட்டமிட்டு மறைமுகமாக செயலிழக்கச் செய்து நிறுத்துவதுதான் இந்த அரசின் நோக்கமா? உடனடியாக நிலுவையிலுள்ள உதவித் தொகையை விடுவித்து, மாணவர்களின் கல்வியைத் தடையின்றி தொடரச் செய்ய வேண்டும்.

இவ்வாறு கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தமது டிவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### 100 நாட்களில் ரீல்ஸ் எடுத்து சீரியல் தயாரித்து

# மக்களை ரீல்ஸ் பார்க்க வைத்திருப்பது மிகப்பெரிய அவமானமாக இல்லையா CM SIR?

## சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு கேள்வி!

*சென்னை, ஆக. 19 -*

*"100 நாட்களில் ரீல்ஸ் எடுத்து சீரியல் தயாரித்து மக்களை ரீல்ஸ் பார்க்க வைத்திருப்பது அவமானமாக இல்லையா CM SIR?" என்று சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு கேள்வி எழுப்பியுள்ளார்.*

*இதுகுறித்து அவர் தமது சமூக வலை தளத்தில் பதிவிட்டிருப்ப தாவது:-*

*த.வெ.க. ஆட்சி பொறுப்பேற்ற 100 நாட்களில் தமிழகத்தில் சுமார் 200 கொலைகள், 10க்கும் மேற்பட்ட ஆணவக் கொலைகள், சுமார் 400 பாலியல் குற்றங்கள், தினம்தோறும் 2.5 வயது*



*குழந்தை முதல் 85 வயது முதியவர் வரை பாலியல் வன்கொடுமை கொலைகள், 10க்கும் மேற்பட்ட காவல்நிலைய மரணங்கள் என தமிழ்நாட்டை பாதுகாப்பில்லாத மாநிலமாக மாற்றிய விஜய் அவர்களே! நினைவிருக்கிறதா?*

*"ஒவ்வொரு காவல் நிலைய மரணமும் அந்த ஆட்சியின் தோல்வி" என உங்கள் தேர்தல் அறிக்கையில் சொன்னதை மறந்து உங்கள் தோல்வி ஆட்சித் தொடர வேண்டுமா CM SIR?*

*முதல்வரைச் சுற்றி யுள்ள நான்கு நண்பர்களும் இயக்குநர்களாக உருவாகி, 100 நாட்களில் விஜய்யை வைத்து ரீல்ஸ் எடுத்து சீரியல் தயாரித்து முதல்வரை தன் கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு வாக்களித்த மக்களை ரீல்ஸ் பார்க்க வைத்திருப்பது மிகப் பெரிய அவமானமாக இல்லையா CM SIR ?*

*நேற்று, 100வது நாளில், போதைப்பொருள் பழக்கத்தைப் பற்றி காவல்துறைக்கு தகவல் கொடுத்த அமுதன் மற்றும் தினேஷ் உள்ளிட்ட மாணவர்கள் போதைப்பொருள் கும்பலால் கொலை செய்யப்பட்டதற்கு பொறுப்போடு எதிர்க்கட்சித் தலைவருக்கும், நாட்டு மக்களுக்கும் பதில் சொல்ல வேண்டிய முதல்வர், சினிமா பாணியில் தனக்குப் பதிலாக 'டூப்'களை பதில் சொல்ல வைத்து தமிழகத்தையே தலைகுனிய வைத்து விட்டு ஓடி ஒளிவது வெட்கமாக இல்லையா CM SIR ?*

*இவ்வாறு அவர் தமது சமூக வலை தளத்தில் பதிவிட்டுள்ளார்.*

### அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வித் திட்ட

# மாணவர்களுக்கான கல்விக் கட்டணத்தைச் செலுத்துவதில் அலட்சியம் ஏன்?

## முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கண்டனம்!

*சென்னை, ஆக. 19 -*

*"அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வித் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டை செலுத்துவதில் அலட்சியம் ஏன்?" என்று முன்னாள் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கேள்வி எழுப்பியுள்ளார்.*

*இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-*

*அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வி திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டை நடப்பாண்டில் அதிகரித்து இருப்பதாக அரசுத் தரப்பில் சொல்லப்படுகிறது. ஆனால் அத்திட்டத்தின் கீழ் 2025- 2026ஆம் கல்வியாண்டில், அதாவது திராவிட மாடல் ஆட்சி காலத்தில் மலேசிய தேசிய பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சிப் படிப்பில் சேர்க்கைப் பெற்று பயின்றுவரும் மாணவருக்கு, நடப்பு கல்வியாண்டிற்கான*



*கட்டணத்தை செலுத்துவதில் ஏன் இவ்வளவு அலட்சியம்?*

*ஏற்கனவே, இங்கிலாந்தில் உள்ள கல்வி நிறுவனங்களில் பட்டமேற்படிப்புக்கு சேர நடப்பாண்டில் விண்ணப்பித் துள்ள நம் மாணவர்களுக்கு 'மாநில அரசின் கல்வி உதவித்தொகையை ஏற்க முடியாது இந்திய ஒன்றிய அரசின் மூலம் வழங்கப்பட்டால் மட்டுமே ஏற்றுக்கொள்ள முடியும்' என்ற புதிய விதியை சுட்டிக்காட்டி சேர்க்கை பெறுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.*

*அந்த புதிய விதிக்கான காரணமாக கல்வி நிறுவனங்கள் தரப்பில் அளிக்கப்பட்ட விளக்கத்தில் "மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கும் அமைப்பு, அதனை இடையிலேயே நிறுத்தி விட்டால் கல்விக் கட்டணம் செலுத்த முடியாமல் மாணவர்கள் படிப்பை தொடர முடியாத நிலை உருவாகுகிறது; எனவே இடைநிற்றல் ஏற்படும் சூழலும் ஏற்படுகிறது" என தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*அதன்படி பார்த்தால், மலேசியா நாட்டில் பயிலும் நம்முடைய மாணவர்களுக்கு உரிய நேரத்தில் கட்டணம் செலுத்தா மல் த.வெ.க. அரசு அலட்சியமாக இருப்பதால், அங்கும் எதிர்காலத்தில் தமிழ்நாட்டு அரசின் கல்வி உதவித்தொகையை நேரடியாக ஏற்க உயர்கல்வி நிறுவனங்கள் மறுக்கும் வகையில் விதிகள் உருவாக்கப்பட்டு விடுமோ என்ற அச்சம் ஏற்படு கிறது.*

*இன்னும் இதுபோல எத்தனை நாடுகளில் பயிலும் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்களோ என்கிற கேள்வியும் எழுகிறது. TAKE DIVERSION அரசின் இத்தகைய அலட்சியப்போக்கு, அரசின் உதவித்தொகையை மட்டுமே நம்பி கல்விக்காக கடல்கடந்து சென்றுள்ள மாணவர்களுக்கு எத்தகைய மனஅழுத்தத்தை ஏற்படுத்தும் என்பதை நினைத்துப் பார்க்கவே வேதனையாக இருக்கிறது. அலட்சியப் போக்கினை கைவிட்டு, அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வித் திட்ட மாணவர்களுக்கான கல்விக் கட்டணத்தை உரிய காலத்தில் விடுவிக்க முதலமைச்சர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.*

*இவ்வாறு முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தமது அறிக்கையில் கூறியுள்ளார்.*

### த.வெ.க. ஆட்சியில் — கல்வி நிறுவனங்களில்

# போதைப் பொருள்களின் பயன்பாடு அதிகரித்துள்ளது கண்டனத்திற்குரியது!

## நடவடிக்கை எடுக்காத த.வெ.க. அரசுக்கு எஸ்.ஆஸ்டின் எம்.எல்.ஏ. கண்டன அறிக்கை!

*சென்னை, ஆக. 19-*

*த.வெ.க. ஆட்சியில் கல்வி நிறுவனங்களில் போதைப் பொருட்களின் பயன்பாடு அதிகரித்துள்ளது. இதற்கு உரிய நடவடிக்கை எடுக்காத இந்த அரசை வன்மையாக கண்டிக்கிறேன் என நாகர்கோவில் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆஸ்டின் கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

*அவரது அறிக்கை வருமாறு:-*

*தக்கலை அரசு மேல்நிலைப்பள்ளியில் சில மாணவிகள், பள்ளி வளாகத்திலேயே மதுபானம் அருந்தியதாக வெளியாகியுள்ள தகவலும், அது தொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் பரவியிருப்பதும் மிகுந்த அதிர்ச்சியையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.*

**ஆன்லைனில் மதுபானம் ஆர்டர் - எந்த வகையான சமூக முன்னுதாரணம்!**

*மாணவர்களின் எதிர்காலத்தை உருவாக்க வேண்டிய பள்ளி வளாகமே இது போன்ற சம்பவங்களுக்கு இடமாக மாறியிருப்பது மிகவும் கண்டிக்கத்தக்கது. ஒருபுறம், பள்ளி மாணவர்களிடம் மதுபானம் மற்றும் போதைப்பொருட்களின் தாக்கம் குறித்து அரசு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டிய நிலையில், மறுபுறம் TAS MAC மதுபானங்களை ஆன்லைனில் ஆர்டர் செய்து வாங்கும் வசதியை அறிமுகப்படுத்தியிருப்பது எந்த வகையான சமூக முன்னுதாரணத்தை உருவாக்குகிறது என்ற கேள்வி எழுகிறது. தற்போதைய TVK அரசு TAS MACல் ஆன்லைன் ஆர்டர் மற்றும் டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை மூலம் கடையில் பெற்றுக்கொள்ளும் வசதியை அறிமுகப்படுத்தியுள்ளது.*

*மதுபான விற்பனையை அதிகப்படுத்துவதில் காட்டப்படும் வேகத்தைவிட, மாணவர்களை மதுபானம் மற்றும் போதைப்பொருட்களிலிருந்து பாதுகாப்பதில் அரசு அதிக அக்கறை காட்ட வேண்டும். இதனுடைய தொடர்ச்சி ஆன்லைன் டெலிவரி செயலிகள் (Online Delivery Apps) மூலம் மதுபானங்களை டோர் டெலிவரி செய்யும் நிலைக்கு கொண்டு செல்லும் இது இளைய சமுதாயத்தினர் வாழ்வை மேலும் சீரழித்து விடும். பள்ளிகளைச் சுற்றியுள்ள பகுதிகளில் மதுபானம் மற்றும் போதைப்பொருட்கள் சட்டவிரோதமாக சிறார்களுக்கு விற்பனை செய்யப்படுகிறதா என்பது குறித்து*



*காவல்துறையும் சம்பந்தப்பட்ட துறைகளும் தொடர் மற்றும் தீவிர சோதனைகளை மேற்கொள்ள வேண்டும்.*

*மேலும், இந்தச் சம்பவத்தின் பின்னணி குறித்து முழுமையான விசாரணை நடத்தி, மாணவர்களுக்கு மதுபானம் கிடைக்க காரணமானவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் மீது சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். அதே நேரத்தில், மாணவர்களை அவமானப்படுத்துவதோ அல்லது சமூக வலைதளங்களில் அவர்களின் அடையாளத்தை வெளிப்படுத்துவதோ கூடாது. அவர்களுக்கு தேவையான ஆலோசனை, விழிப்புணர்வு மற்றும் உளவியல் வழிகாட்டுதலை வழங்குவதும் அரசின் கடமையாகும்.*

**போதைப் பொருள் தடுப்பு சிறப்புப் பிரிவு என்ன ஆனது?**

*மாணவர்களின் எதிர்காலத்தை பாதுகாப்பதே அரசின் முதல் கடமை. பள்ளிகள் கல்விக்கூடங்களாக இருக்க வேண்டும். மதுவுக்கும் போதைக்கும் இடமாக மாறக்கூடாது. த.வெ.க. ஆட்சியில் கல்வி நிறுவனங்களில் போதைப் பொருட்களின் பயன்பாடு அதிகரித்துள்ளது. வன்மையாக இதற்கு உரிய நடவடிக்கை எடுக்காத இந்த அரசை கண்டிக்கிறேன்.*

*முதலமைச்சர் ஆட்சிப் பொறுப்பேற்றுடன் கையெழுத்திட்ட மூன்று அறிவிப்புகளில் ஒன்றான போதைப் பொருள் தடுப்பு சிறப்பு பிரிவு என்ன ஆனது? அது செயலிழந்திருப்பதையே இதுபோன்ற சம்பவங்கள் உணர்த்துகிறது. இந்த விவகாரத்தில் தமிழக அரசு உடனடியாக தலையிட்டு, பள்ளி மாணவர்களின் பாதுகாப்பிற்கும் போதைப்பொருள் தடுப்பிற்கும் கடுமையான மற்றும் நிரந்தர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.*

*இவ்வாறு எஸ்.ஆஸ்டின் எம்.எல்.ஏ. தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

## முதல் ஆண்டு நினைவஞ்சலி



# ரேணுகா தேவி பாலு

1946 - 2025

ஒரு ஆண்டு கடந்தாலும்,
உங்கள் அன்பும் பாசமும் நினைவுகளும்
எங்கள் இதயங்களில் என்றும் நிலைத்திருக்கும்

டி.ஆர். பாலு, MP
Dr. டி.ஆர்.பி. ராஜா
செல்வகுமார் பாலு